**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

| | | |
|---|---|---|
| Sessions Case No. | : | 19/2022 |
| | : | Prosecution - **PW-16** |
| Deposition of witness for | : | Defense |

| | | | |
|---|---|---|---|
| Name | : முனைவர் திரு.M.மணிமாறன் | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 03rd day of September 2024.

(1 ம் எதிரி கனகராஜ், 2 ம் எதிரி சந்தோஷ்குமார், 3 ம் எதிரி பிரகாஷ், 4 ம் எதிரி அழகுலெட்சுமி (அம்மு), 5 ம் எதிரி ஜெயலலிதா ஆகிய 1 முதல் 5 எதிரிகள் ஆஜர்)

அ.சா.16 சாட்சி சென்னை, தடய அறிவியல் துறையில் அறிவியல் அலுவலராக பணிபுரிந்து வருவதால், சென்னையிலிருந்து கரூருக்கு வந்து செல்லும் காலதாமதத்தை தவிர்க்கும் பொருட்டு, சாட்சியை காணொலி மூலமாக விசாரணை செய்வதற்கு இந்நீதிமன்றம் Crl.M.P.No.1036/2024 ல் கடந்த 02.09.2024 தேதியில் பிறப்பித்த உத்தரவை தொடர்ந்து, அ.சா.16 முனைவர் திரு.M.மணிமாறன், சென்னை மாநகர உரிமையியல் காணொலி அரங்கில் முன்னிலையாகியுள்ளார். சென்னை மாநகர உரிமையியல் நீதிமன்ற காணொலி அரங்கில் உள்ள அ.சா.16 இந்நீதிமன்றத்தில் காணொலி மூலம் காணொலி திரையில் இணைக்கப்பட்டுள்ளார். சாட்சி அமர்ந்துள்ள சென்னை, மாநகர உரிமையியல் நீதிமன்ற காணொலி அரங்கில் அவர் அருகில் வேறு யாரும்

இல்லை என்று நீதிமன்ற Assistant Programmer செல்வி.விசாலாட்சி, என்பவர் மூலம் உறுதி செய்யப்பட்டு சாட்சி இந்நீதிமன்ற மொழிபெயர்ப்பாளர் திருமதி.ஜெயந்தி, அவர்கள் மூலமாக சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்படுகிறார்.

<u>**முதல் விசாரணை**</u>

நான் தற்போது செங்கல்பட்டு மாவட்டம், காஞ்சிபுரம் இயக்கும் தடய அறிவியல் ஆய்வகத்தில் அறிவியல் அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 06.10.2020 அன்று சென்னை தடய அறிவியல் துறையில் மானுடவியல் பிரிவில் அறிவியல் ஆய்வாளராக பணிபுரிந்தபோது, கரூர் நீதித்துறை நடுவர் எண். 1, கரூர் அவர்களின் கடித எண். 829/2020, நாள். 05.10.2020 கடிதத்துடன், பசுபதிபாளையம் காவல்நிலைய குற்ற எண். 82/2018 சம்மந்தப்பட்ட வழக்கு பொருட்கள் காவலர் 1780 திரு.ஆர்.பாலசுப்பிரமணி என்பவர் மூலம் ஆய்வகத்தில் ஆய்விற்காக பெறப்பட்டது. அதில் முத்திரை வைக்கப்பட்ட ஒரு கவரிலிருந்த ஆண் மற்றும் பெண் ஜோடியாக இருந்த ஒரு வண்ண புகைப்படத்தை பொருள் 1 எனவும், ஆண் மற்றும் பெண் ஜோடியாக இருந்த மற்றொரு வண்ண புகைப்படத்தை பொருள் 2 எனவும், ஒரு ஆணின் வண்ண புகைப்படத்தை பொருள் 3 எனவும், குழந்தையுடன் இருந்த ஒரு ஆணின் வண்ண புகைப்படத்தை பொருள் 4 எனவும், ஒரு ஆணின் வண்ண புகைப்படத்தை பொருள் 5 எனவும், மற்றொரு ஆணின் வண்ண புகைப்படத்தை பொருள் 6 எனவும், இரண்டு ஆண்கள் உள்ள ஒரு வண்ண புகைப்படத்தை பொருள் 7 எனவும் குறியீடு செய்யப்பட்டது. முத்திரை வைக்கப்பட்ட ஒரு அட்டை பெட்டியினுள் ஒரு பிளாஷ்டிக் வாளியிலிருந்த துண்டிக்கப்பட்ட மனித தலையை பொருள் 8 என குறியீடு செய்யப்பட்டது.

கடந்த 16.06.2021 அன்று நீதித்துறை நடுவர் எண்.1, கரூர் அவர்களின் கடித எண். 717/2021, நாள். 16.06.2021 கடிதத்துடன் பசுபதிபாளையம் காவல்நிலைய கு.எண். 82/2018 வழக்கு சம்மந்தப்பட்ட வழக்குப்பொருள் ......

தலைமைக்காவலர் 1821 திரு.எஸ்.சரவணன் என்பவர் மூலம் பெறப்பட்டது. அதில் முத்திரை வைக்கப்பட்ட ஒரு கவரிலிருந்த ஆண் மற்றும் பெண் ஜோடியாக இருந்த ஒரு வண்ண புகைப்படம் பொருள் 9 என குறியீடு செய்யப்பட்டது.

அதன்பிறகு, பொருள் 8 தலையானது சுத்தம் செய்யப்பட்டு, கீழ்த்தாடையுடன் கூடிய மண்டையோடு பெறப்பட்டது. உடைந்த நிலையில் இருந்த கீழ்த்தாடை ஒட்டப்பட்டது. மண்டையோட்டின் இரு கண் குழிகளில் வெளி விளிம்பிற்கு இடைப்பட்ட தூரம் 9.7 செ.மீ. ஆக இருந்தது. அதனடிப்படையில், பொருள் 1 முதல் 7 மற்றும் 9 என விவரிக்கப்பட்ட புகைப்படங்கள் சுயஉருவ அளவிற்கு பெரிதாக்கப்பட்டது. அதன்பிறகு, பொருள் 8 மண்டையோடானது பொருள் 3 மற்றும் 9 புகைப்படங்களுடன் கணிணி உதவியுடன் கூடிய வீடியோ மேற்பதிவு முறையில் ஆய்வு செய்யப்பட்டது.

மேற்படி ஆய்வில், பொருள் 8 மண்டையோடானது, பொருள் 3 புகைப்படத்தில் உள்ள ஆணிற்கு உரியதாக இருப்பதற்கு சாத்தியமில்லை எனவும், பொருள் 8 மண்டையோடானது, பொருள் 9 புகைப்படத்தில் உள்ள ஆணிற்கு உரியதாக இருப்பதற்கு சாத்தியம் உள்ளது எனவும் கண்டறியப்பட்டு, மேற்படி கருத்துரையை மானுடவியல் எண்கள். 115/2020 மற்றும் 105/2021, நாள். 15.07.2021 என குறிக்கப்பட்டு, மேற்படி கரூர், நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. ஆய்வின்போது எடுக்கப்பட்ட ஆய்வு பிரதிகள் ஆய்வறிக்கையுடன் இணைத்து அனுப்பப்பட்டது.

பொருள் 1, 2, 4, 5, 6, 7 என விவரிக்கப்பட்ட புகைப்படங்கள் பெரிதாக்கிய பின், தெளிவாக இல்லாததால் அவற்றை ஆய்விற்கு பயன்படுத்தவில்லை.

நீதிமன்றத்திற்கு நான் அனுப்பிய அறிக்கை என்னிடம் காட்டப்படுவதாகும். அது நீ.ம.சா.ஆ.3.

1 முதல் 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

மண்டையோட்டின் இரு கண் குழிகளில் வெளி விளிம்பிற்கு இடைப்பட்ட தூரம் குறித்து என்னுடைய அறிக்கையில் நான் கூறவில்லை என்றால் சரியல்ல. கூறியுள்ளேன். எனது அறிக்கையில், முகத்தில் உள்ள கிரானியா, ரோனியா, நேஷியா, லேபுலா, மென்டான் ஆகியவற்றின் இடைப்பட்ட தூரத்திற்கும், விரிவு செய்யப்பட்ட புகைப்படத்தில் உள்ள மேற்சொன்னவைகளில் உள்ள தூரத்தையும் நான் கைப்பட எழுதவில்லை என்றால் சரியல்ல. மண்டையோட்டின் பண்புகளை குறிப்பிட்டுள்ளேன். நான் அவ்வாறு எனது அறிக்கையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. விரிவாக்கம் செய்யப்பட்ட இரண்டு வெவ்வேறு கோணங்களில் உள்ள புகைப்படத்தை வைத்து மண்டையோட்டை நான் ஒப்பீடு செய்து பார்க்கவில்லை என்றால் நீதிமன்றத்தின் மூலம் அனுப்பப்பட்ட புகைப்படத்துடன் மண்டையோட்டுடன் இணைத்து ஆய்வு செய்தேன். இரண்டு வெவ்வேறு கோணங்களில் உள்ள புகைப்படத்துடன், மண்டையோட்டை வைத்து ஆய்வு செய்ய வேண்டும் என்றும், ஒரு புகைப்படத்தை வைத்து ஆய்வு செய்யும்போது தவறு ஏற்படும் என்றும் சொன்னால் சரியல்ல. நான் பல்வேறு மானுடவியல் புள்ளிகளை அளவெடுக்காமல், ஒரு புகைப்படத்துடன் வைத்து ஆய்வு செய்த காரணத்தினால், எனது அறிக்கை முழுமையடையவில்லை என்றால் சரியல்ல.

**4, 5 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

மேற்படி குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

**மறு விசாரணை**

இல்லை.

ஒம்/- ஆர்.சண்முகசுந்தரம்
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

| | | |
|---|---|---|
| Sessions Case No. | : | 19/2022 |
| | : | Prosecution - **PW-17** |
| Deposition of witness for | : | Defense |

| | | | |
|---|---|---|---|
| Name | : செல்வராஜன் | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 03rd day of September 2024.

(1 ம் எதிரி கனகராஜ், 2 ம் எதிரி சந்தோஷ்குமார், 3 ம் எதிரி பிரகாஷ், 4 ம் எதிரி அழகுலெட்சுமி (அம்மு), 5 ம் எதிரி ஜெயலலிதா ஆகிய 1 முதல் 5 எதிரிகள் ஆஜர்)

முதல் விசாரணை

நான் தற்போது நாமக்கல் மாவட்டம், ராசிபுரம் காவல் ஆய்வாளராக பணிபுரிகிறேன். நான் கடந்த 23.06.2020 அன்று கரூர் மாவட்ட, தனிப்பிரிவு ஆய்வாளராக பணியிலிருந்தபோது, பசுபதிபாளையம் காவல்நிலைய கு.எண். 82/2018 ச/பி. 302 இதச வழக்கை சம்பவ இடத்தில் உள்ள dump tower ல் பதிவான செல்போன் எண்களுக்கு உள் வெளி அழைப்பு விவர அறிக்கைகளை பெற்றுத்தருமாறு, பசுபதிபாளையம் வட்ட காவல் ஆய்வாளர் கொடுத்த விண்ணப்பத்தை, உள் வெளி அழைப்பு விவர அறிக்கைகளை பெற்றுத்தரும், கணிணி ......

இயக்குநர் காவலர் 1520 பாபு என்பவரிடம் மேற்சொன்ன குற்ற வழக்கில் சம்மந்தப்பட்ட சம்பவ இடத்தில் பதிவான செல்போன் tower dump எண்களின் விவரத்தினை சம்மந்தப்பட்ட செல்போன் நிறுவனங்களுக்கு அனுப்பி, அழைப்பேசி எண்களின் உள், வெளி அழைப்பு விவர அறிக்கைகளை பெற்று, சம்மந்தப்பட்ட காவல்நிலையத்திற்கு அனுப்பி வைக்க கோரினேன்.

குறுக்கு விசாரணை

இல்லை என கற்றறிந்த வழக்கறிஞர்கள் தெரிவித்தார்கள்.

ஒம்/- ஆர்.சண்முகசுந்தரம்
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.